பனை அபிவிருத்தி சபை - 2020

---

## 1. நிதி கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பனை அபிவிருத்தி சபையின் (''சபை'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைத் தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகைச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் உள்ள கணக்காய்வு அவதானிப்புகள்

## 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்) - 07 இன் அடிப்படையில், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட இன்னும் பயன்பாட்டில் உள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (பிபிஈ) தொடர்பான கிரயங்கள் ரூபா. 219,512,866 நிதிகூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமல் உள்ளன. அத்துடன் எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்-03 இன் படி நிதிகூற்றுக்களில் குறித்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறித்த மதிப்பீடு பிழை திருத்தம் செய்யப்படவில்லை. | எதிர்காலத்திற்கான உரிய நடவடிக்கை முகாமையால் எடுக்கப்படும். | எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்-7 இன் தேவைப்பாட்டிற்கமைய இன்னும் பயன்பாட்டில் உள்ள முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் நிதிகூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தின் மதிப்பீட்டு பிழைகள் சரிசெய்யப்பட வேண்டும். |
| **(ஆ)** | நிதிகூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கை 2.1.4 இன் படி பதிவழிப்பானது ஒரு செலவீனமாக இனங்காணப்படுவதிற்கு பதிலாக சாத்தியமான பொருளாதார நன்மைகள், சேவைக்கான சாத்தியங்கள் இனங்காணப்படாமல் ஒரு கைவினைப் பொருட்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் விதை நடுகை தொடர்பாக 2015ம் ஆண்டிற்கு முன்பாக உள்வாங்கப்பட்ட ரூபா. 58,633,355 ஆனது சொத்தாக இனங்காணப்பட்டுள்ளதுடன் பதிவழிப்பானது எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்- 20 ற்கு முரணாக உள்ளது. இதன் விளைவாக நிதிகூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்து மிகைப்படுத்தி | எதிர்வுகூறப்பட்ட நிதி ரூபா. 58,633,355 மீதியான நடைமுறையல்லா சொத்தானது முறையான சபை ஒப்புதலின் பின்னர் சரிசெய்யப்படுவதுடன் முன்னைய காலப்பகுதிக்கான மூலதன பதிவழிப்பான தொகை ரூபா 14,658,338 ஆனது உரிமை மாற்ற கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், நாங்கள் உண்மையான இலாபம் அல்லது நட்டத்தை வெளிகாட்டுவதற்கு எதிர்பார்கிறோம். | எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்-20 இல் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகள் கணக்கிடப்பட வேண்டும். |

காட்டப்பட்டுள்ளது. மேலும் மீளாய்வாண்டிற்கான ரூபா. 14,658,338 பதிவழிப்பு தொகையான கைவினைப் பொருட்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் விதை நடுகை தொடர்பான செலவீனமானது வருமானக்கூற்றில் செலவீனமாக இனங்காண்பதற்கு பதிலாக உரிமை மூலதன மாற்றக்கூற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான இலாபமானது ரூபா. 14,658,338 ஆல் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளதுடன் மற்றும் மூலதனமானது அதே அளவால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

**1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது வருடாந்த மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனத்திற்காக அரச மானியத்தினை பெற்றிருந்த போதிலும் அரச மானியங்களின் கணக்கீட்டிற்கான கணக்கீட்டுக் கொள்கையானது அறிமுகப்படுத்தப்படாமல் உள்ளதுடன் மீளாய்வாண்டிற்கான அரச மானியப்பெறுவனவாக ரூபா 137,650,053 மட்டும் பெற்றிருந்தது. | எதிர்காலத்திற்கான உரிய நடவடிக்கை முகாமையால் எடுக்கப்படும். | அரசாங்க மானியங்களின் கணக்கீடு தொடர்பான கணக்கீட்டு கொள்கையானது அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் கணிப்பீட்டு தவறு காரணமாக ரூபா. 70,318,339 ஆல் பணிக்கொடைக்கான ஏற்பாடானது குறைத்து காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடைக்கான ஏற்பாடானது ஐந்து வருடங்கள் நிறைவு செய்த பணியாளர்கள் பட்டியலுக்கு மட்டுமே கணிக்கப்பட்டுள்ளது. முறையான சபை ஒப்புதலின் பின்னர் பணி நிறைவு செய்த | வழிகாட்டுதல்களின் படி நிதிகூற்றுகளில் பணிக்கொடை கொடுப்பனவிற்கான கணிப்பீட்டில் திருத்தத்தை செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டினை பணிக்கொடை ஏற்பாட்டு கணிப்பீட்டிற்கு கருத்தில் கொள்வோம். | |
| **(ஆ)** | நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதிகளின் தேறிய பெறுமதியான அரச மானிய கணக்கு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கணக்கு (வரவு மீதி) மற்றும் மறுமதிப்பீட்டு ஒதுக்க கணக்கு மீதி ரூபா. 24,924,702 ஆனது ஒவ்வொரு கணக்கின் வரவு செலவு நிலுவைகளை எதிரிடை செய்வதற்கான செம்மையாக்கங்களுக்கான காரணங்களை வெளிப்படுத்தாமலும், ஆதார ஆவணங்களை வழங்காமலும் ஏனைய மூலதன கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மீளாய்வாண்டின் இறுதியில் அரசாங்க மானிய கணக்கு மற்றும் மறுமதிப்பீட்டு ஒதுக்க கணக்கு மீதிகள் ரூபா 34,330,000 மற்றும் ரூபா. 8,917,627 முறையே குறைத்து காட்டப்பட்டுள்ளதுடன் ஏனைய மூலதனக்கணக்கு மீதியானது ரூபா. 24,924,702 ஆல் நிதிகூற்றுக்களில் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை முகாமையால் எடுக்கப்படும். | முறையான கணக்கியல் நடைமுறையை முகாமை பின்பற்ற வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆறு வருடங்களுக்கு மேலாக நிலுவையாக இருக்கும் அறவிட வேண்டிய கடன் நிலுவையின் திரட்டிய தொகை ரூபா. 9,737,265 தொடர்பில் சபையால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முகாமையானது எதிர்காலத்தில் அவ்வப்போது சட்டக் கோரிக்கையை சட்ட ஆலோசகரின் உதவியுடன் அனுப்பும். முகாமையானது நிரல் அமைச்சின் சட்ட அலோசகரின் ஆலோசனையுடன் மேலதிகமான நடவடிக்கையினை மேற்கொள்ளும். | கூடிய வரையில் நிலுவைத் தொகையை வசூலிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒன்று தொடக்கம் ஐந்து வருட காலமாக கடன்கொடுனரில் உள்ளடங்கியுள்ள கடன்கொடுத்தோர் மீதி மொத்தம் ரூபா 3,365,391 மீளாய்வாண்டிறுதி வரை தீர்க்கப்படாதிருந்தது. | எவ் ஆர் 115 இன் படி முகாமையானது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. | நடைமுறையில் உள்ள பொறுப்புகளை அடையாளம் காண மற்றும் பணம் செலுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அது பொறுப்பல்ல என்றால், அச் செலுத்த வேண்டியவைகள் வருமானமாக பதிவழிக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பிரிவு 40 (1)** | உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டை மேற்கொள்வதற்காக சபையினுடைய ஆளுகைக் குழு உள்ளக கணக்காய்வாளரை நியமித்திருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பாரபட்சமற்ற ஆய்வு, பொருத்தமான கணக்காய்வுத் திட்டம் மற்றும் அமுல்படுத்தல்களின் வினைதிறனான செயல்பாடுகளுக்காக தற்போதைய தலைவர் உள்ளக கணக்காய்வுப் பிரிவை நியமிக்கவில்லை. | தேசிய கணக்காய்வு சட்டத்துடன் இணங்க வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி** | | | |
| **(i)** நிதி ஒழுங்கு விதி, பிரிவு 110 | நட்டங்கள் மற்றும் சேதங்களுக்கான பதிவேடு பராமரிக்கப்படாமல் உள்ளது. | எதிர்காலத்தில் நாங்கள் நட்டங்கள் மற்றும் சேதங்களுக்கான பதிவேட்டை பராமரிப்போம். | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்க வேண்டும். |
| **(ii)** நிதி ஒழுங்கு விதி, பிரிவு 115 (3) (பீ) | 12 சந்தர்ப்பங்களில், பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் | எதிர்காலத்தில் நாங்கள் தாமதமாக பணம் செலுத்துவது தொடர்பான நிதி ஒழுங்கு விதியைப் | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சூழ்நிலைகளில் உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிட்டிருக்கவேண்டிய முறையாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சான்றிதழைப் பெறாமல், ரூபா. 1 மில்லியன் அளவுக்கு காலாவதியான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. | பின்பற்றுவோம். மேலும் 115 (பீ) க்கு இணங்கி பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | |
| **(இ)** | 2006 தை 25 ஆம் திகதிய தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கை இல.08 | குறைந்தபட்சம் 03 வருடங்களை உள்ளடக்கிய பெறுகைத் திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையானது ஆண்டு தோறும் மூலதனம் மற்றும் மீண்டெழும் நிதியைப் பெறுகிறது. மேலும் வாழ்வாதார மேம்பாட்டுக்காக நிரல் அமைச்சிடம் இருந்து சிறப்பு நிதியைப் பெற்றுள்ளோம். எனவே, அபிவிருத்தியை விபரிக்க முடியாதுள்ளதுடன் பெறுகை திட்டத்தையும் தயாரிக்க முடியவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் பெறுகை வழிகாட்டுதல்களுடன் இணங்க வேண்டும். |
| **(ஈ)** | 2003 ஆடி 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல.பீஈடி/12 பிரிவு 6.5.1 | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டு அறிக்கை ஆகியவை, நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் 67 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு 06 மே 2021 அன்று மட்டுமே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. | 2018 திசம்பர் 17 ஆம் திகதிய கணக்காய்வாளர் தலைமையதிபதியினுடைய கடிதம் ஏஜி.ஜிஇஎன்/எஸ்ஈசி/2018/82 மற்றும் அரச பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின்படி சரியான நேரத்தில் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சபையின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 67,787,399 தொகையான பற்றாக்குறையானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 79,121,047 தொகை ஆகும். அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 11,333,648 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செலவினம் வீழ்ச்சியடைந்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டு ரூபா. 20.85 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மூன்று பனங்கட்டி உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் மூன்று வருடங்களுக்கும் மேலாக உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டிருந்தன. | சபையானது கரவெட்டி பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திடம் (சபை அனுமதியுடன்) கையளித்திருந்ததுடன், அது தற்போது அதிக பனங்கட்டி உற்பத்திப் பிரதேசத்தின் அடிப்படையில் திறம்படச் செயற்படுகின்றது. மீதமுள்ள இரண்டு இயந்திரங்களை பயனுள்ளவைகளாக மாற்றுவோம். | இயந்திரங்களை விளைதிறனாக பயன்படுத்த பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் சபையின் 8 முகாமையாளர்களுக்கான சம்பள உயர்வுகளின் மேலதிக கொடுப்பனவு ரூபா. 4,280,600 மீளாய்வாண்டின் இறுதி வரை வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்சினையை தெளிவுபடுத்துவதற்காக நிரல் அமைச்சின் செயலாளரினால் சுயாதீன விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் முடிவின் படி முகாமை நடவடிக்கை எடுக்கும். | மேலதிக கொடுப்பனவை வசூலிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |